| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. எஸ். பானு., | திரு வே.சுடலை அவர்கள், |
| நகர்மன்ற தலைவர் | நகர்மன்ற துணைத்தலைவர் (ம), |
| தென்காசி நகராட்சி, | அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் |
| தென்காசி. | தென்காசி நகர்மன்றம். |

நாள்: 24/07/2015

ஐயா,

பொருள்: நகர்மன்ற சாதாரணக் கூட்டம் – தொடர்பாக

—————————————

தென்காசி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் 29-07-2015 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி கூட்டத்திற்கு அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் மேற்படி கூட்ட மன்றத்தின் பொருட்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

நகர்மன்ற தலைவர்,
தென்காசி நகர்மன்றம்

இணைப்பு : மன்றப் பொருள்

நகல் :

1. பாராளுமன்ற உறுப்பினர், தென்காசி
2. சட்டமன்ற உறுப்பினர், தென்காசி
3. ஆணையர் மேஜைக்கு மற்றும் மேலாளர் மேஜைக்கு
4. பொறியாளர், தென்காசி நகராட்சி
5. சுகாதார அலுவலர், தென்காசி நகராட்சி
6. நகரமைப்பு ஆய்வாளர், தென்காசி நகராட்சி
7. வருவாய் ஆய்வாளர், தென்காசி நகராட்சி
8. சுகாதார ஆய்வாளர், தென்காசி நகராட்சி
9. பத்திரிக்கை நிருபர்கள்.

30-06-2015 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட மன்றப்பொருள் (ஒத்தி வைக்கப்பட்டது)

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் ஊர்க்காடு தாமிரபரணி ஆற்றுப்படுகை மற்றும் குற்றாலம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. மேற்படி இரண்டு திட்டங்களுக்கும் நிர்வாக செலவுத் தொகை , மின்சாரக் கட்டணங்கள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் போன்றவற்றிற்கு செலவினத் தொகைகள் அதிகமாக தேவைப்படுகிறது. தற்பொழுது பொதுமக்களிடம் பெறப்படும் தொகை மிக குறைவாக உள்ளதால் இந்நகராட்சிக்கு கூடுதல் செலவீனம் ஏற்படுகிறது. இதனால் நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள சிரமமாக இருக்கிறது. மேலும் நகராட்சி குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு 8 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் தற்போது நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தற்போதுள்ள குடிநீர் கட்டணம் | திருத்தியமைக்கப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோகத்திற்கான கட்டணம் 1000 லிட்டருக்கு 6.50 குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.65.00 | வீட்டு உபயோகத்திற்கான கட்டணம் 1000 லிட்டருக்கு 13.00 குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.130.00 + மாசு கட்டுப்பாட்டு வாரிய தொகை ரூ.5/– |
| 2 | வீடு உபயோகமில்லாத இதர உபயோகங்களுக்கு கட்டணம் ரூ.15.50 குறைந்த பட்ச மாதம் ஒன்றிற்கு ரூ.155/– | வீடு உபயோகமில்லாத இதர உபயோகங்களுக்கு கட்டணம் ரூ.30.00 குறைந்த பட்ச மாதம் ஒன்றிற்கு ரூ300/–+ மாசு கட்டுப்பாட்டு வாரிய தொகை ரூ.5/– |

அ.கு

1 மேற்கண்ட குடிநீர் கட்டண திருத்தங்களை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் திருத்திய கட்டண விபரங்களை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை பொறியாளரின் அனுமதி பெற்று குடிநீர் விநியோக துணை விதியை திருத்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 1</u>**

தென்காசிநகராட்சி ஆணையாளர் அவர்களின் சூன்2015ம் மாதத்திற்கான நாட்குறிப்பேடு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள்: 2</u>**

தென்காசி நகராட்சி பொறியாளர் அவர்களின் சூன் 2015ம் மாதத்திற்கான நாட்குறிப்பேடு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள்: 3</u>**

தென்காசி காவல்துறை ஆய்வாளர் (போக்குவரத்து துறை) அவர்களிடமிருந்து தென்காசி ஐசிஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள அடிபம்பு போக்குவரத்திற்கு இடையூறாகவும் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் அடிபம்பு பிரதான சாலையில் உள்ளது என கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி அடிபம்பினை அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2643/2015/இ1)

**மன்றப்பொருள்: 4**

தென்காசி நகரம் தற்போது வளர்ந்துவரும் நகரமாக உள்ளது. மேலும் இந்நகராட்சி 33 வார்டுகள் உள்ளதால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரே ஒரு குடிநீர் டேங்கர் லாரி மட்டுமே உள்ளது. மேற்படி வாகனத்தை கொண்டு கோடை காலங்களில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே பொது மக்களின் நலன் கருதி DGS&D விலையில் ஒரு குடிநீர் டேங்கர் வாகனம் வாங்குவதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 5**

இந்நகராட்சி திறந்தவெளியில் மனித கழிவுகளை ஒழிக்கும் திட்டம் 2013–14ம் ஆண்டின் கீழ் சுகாதார வளாகம் (Modular Toilet) பொதிகை லாட்ஜ் அருகில் கட்டுவதற்கு இந்நகர்மன்ற முன் அனுமதி நாள். 31/03/2015ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி ஒப்பந்தக்காரர் திரு. அருணாசலம் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி தொடங்கும் நிலையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணியினை மங்கம்மா சாலை எம்.ஜி.ஆர். நகர்பகுதியில் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி சுகாதார வளாகம் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மஇடம் மாற்றி தேர்வு செய்யப்பட்ட எம்.ஜி.ஆர். நகரில் மேற்படி சுகாதார வளாகம் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4147/2015/இ1

**<u>மன்றப்பொருள்: 6</u>**

இந்நகராட்சி ஆளுகைக்குட்பட்ட பகுதி வார்டு எண். 31, உச்சிமாகாளியம்மன் கோவில் 1ம் தெருவில் தம்பிராட்டியம்மன் கோவிலை சுற்றியுள்ள தெருவில் தார்தளம் அமைக்க 10/04/2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற அடியிற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எ | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ இலட்சத்தில் | டெண்டர் ரேட் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.சுடலைமுத்து, ஒப்பந்தக்காரர் | 3.30 | மதிப்பீட்டை விட 0.21 சதவீதம் குறைவு |
| 2 | திரு. எஸ்.குமாரசாமி, ஒப்பந்தக்காரர் | | மதிப்பீடு ரேட்டை விட 0.39 சதவீதம் கூடுதல் |

அ.கு

1 இந்நகர்மன்றம் தனது 27/03/2015ம் தேதிய 476வது தீர்மானத்தில் இப்பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2 வரப்பெற்றுள்ள மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சுடலைமுத்து, ஒப்பந்தக்காரர் என்பவரால் மதிப்பீடு ரேட்டை விட 0.21 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி வார்டில் அமைந்துள்ள தம்பிராட்டியம்மன் கோவிலில் திருவிழா வருவதை முன்னிட்டு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்து மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 7</u>**

இந்நகர் வார்டு எண். 20 மேலஆவணி மூலவீதி கதவு எண். 90/5இ, 91/5எப், 92/5ஜி, 93/5எப்,92/5ஜி,93/5எச்,94/5ஐ,95/5ஜெ,96/5கே,75/5எம்,98/எஸ்2 மற்றும் 99/5எண் உள்ள வரிவிதிப்பு எண்கள் 14628 முதல் 14637ல் உரிமையாளர் திருமதி. எச். லலிதா என்பவர் 01/10/2008 இரண்டாம் அரையாண்டு முதல் தனக்கு தகவல் தெரிவிக்காமல் வரிஉயர்வு செய்யப்பட்டதாகவும், மேலும் கூடுதலாக வரிநிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தான் நகராட்சிக்கு வரி செலுத்த இயலாது என முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தென்காசியில் (ஐஏ எண். 519/2015, ஓ.எஸ் எண். 163/2015)ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் வாதாடவும் வழக்கிற்கு ஆகும் செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |

(ந.க.எண். 1355/2015/அ1)

**<u>மன்றப்பொருள்: 8</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்திட 10க்கு 8 காலியிடம் ஒதுக்கி, அதற்கு வாடகையாக சந்தை விலையை நிர்ணயம் செய்து விண்ணப்பதாரர் திரு. எம்.தங்கராஜ் த.பெ மதுரநாயகம் (லேட்) தென்காசி என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (திரு. தங்கராஜ் த.பெ மதுரநாயகம் , தென்காசி என்பவருக்கு பொதுமேலாளர் ஆவின் பாலகம் , திருநெல்வேலி அவர்களால் அங்கீகாரம் பெற்றவர் ஆவார்)

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | அரசின் அனுமதி பெற்று அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |

(ந.க.எண். 994/2015/எப்1)

**<u>மன்றப்பொருள்: 9</u>**

இந்நகராட்சி வருவாய் பிரிவு வருவாய் ஆய்வர் இருக்கைக்கு கோப்புகள், வழக்கு சம்பந்தமான கோப்புகள், பதிவேடுகள், பராமரிக்க வேண்டியது உள்ளது. எனவே 6 ½ அடி உயரம் உள்ள ஸ்டீல் பீரோ ஒன்று தேவைப்படுவதால் சங்கரன்கோவில் சர்வோதயா சங்கம் நிறுவனத்தில் ஒன்று கொள்முதல் செய்யவும், நகர்மன்றம் பதிவேடு பராமரிக்கவும், நகர்மன்ற எழுத்தர் பிரிவிற்கு ஒரு 6 ½ அடி உயரம் உள்ள ஸ்டீல் பீரோ ஒன்று கொள்முதல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 இரண்டு அலமாரிகள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2 அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதிக்கும், கொள்முதல் செய்தமைக்கும் மற்றும் செலவு தொகைக்கும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2535/2015/அ1)

**<u>மன்றப்பொருள்: 10</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 U 0687 குடிநீர் டேங்கர் வாகனம் தகுதிசான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்தின் பழுதான டேங்கினை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக MS டேங்க் அமைக்கவும் மேற்படி வாகனத்தின் பழுதினை சரிசெய்யவும் உத்தேச செலவுத் தொகை ரூ4.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 அங்கீகாரம் பெற்ற திருநெல்வேலி, அசோக் லேலண்ட் என்ற நிறுவனத்திடம் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 11</u>**

தென்காசி போக்குவரத்துதுறை காவல் ஆய்வாளர் அவர்களின் கடித்தின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான ஆசாத்நகர் வாய்க்கால்பாலம் EB ஆபிஸ் (அருகில்) ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக அடிக்கடி விபத்து நடைபெறுவதால் பொதுமக்களின் நலன் கருதியும் விபத்துகளை தடுப்பதற்கு வாகன ஓட்டுனருக்கு எச்சரிக்கையாக மேற்படி இடங்களில் சிகப்பு விளக்குகள் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி விளக்குகளுக்கான மின்சார கட்டணத்தினை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி மேற்படி மின்சாரக் கட்டணத்தை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் முடிவு செய்யலாம்

**<u>மன்றப்பொருள்: 12</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள லாரிக்கு டி.எண்.76எப் 8885 வாகனத்திற்கு மின்கலம் வாங்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகிறது. மேலும் மின்கலம் முற்றிலும் பழுதுஅடைந்துவிட்டதால் புதிய மின்கலம் வாங்கவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.9600/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு புதிய மின்கலம் வாங்கவும், அதற்கான உத்தேச
செலவினத்தினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1617/2015/எச்1

<u>**மன்றப்பொருள்: 13**</u>

இந்நகராட்சிக்கு திறந்தவெளி மலம் கழிப்பதை ஒழிக்கும் திட்டம் 2013–14ம் ஆண்டின் கீழ் நம்ம டாய்லெட் (Universal Toilet) மேற்கொள்ளப்பட உள்ள கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 13/04/2015ல் முன்அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 31/03/2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் நம்மடாய்லெட் (Universal Toilet) கட்டும் பணி | 15.00 | அருணாசலம், ஒப்பந்தக்காரர்<br><br>யு.முத்துக்குமார், ஒப்பந்தக்காரர் | 4.10% கூடுதல்<br><br>6.95% கூடுதல் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் குறைவாக கொடுத்துள்ள திரு.எஸ்.அருணாசலம், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விகிதத்தை விட 4.10 சதவீதம் கூடுதலாக இருந்தது. எனவே ஒப்பந்தகாரருக்கு விலைக்குறைப்பு தருமாறு (Negotiation) இவ்வலுவலக கடித எண். 4147/2013/இ1 நாள். 01/04/2015ம் தேதியில் அனுப்பப்பட்டது. அதன்பேரில் இரண்டு இனங்களில் விலைக்குறைத்து செய்து தர 07/04/2015ம் தேதியில் ஒப்பந்தகாரரிடம் சம்மத கடிதம் பெறப்பட்டது. அதன் பேரில் திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை விட 3.95 சதவீதம் கூடுதல் என்ற விகிதத்தில் உள்ளது. தற்போது கட்டுமான பொருட்கள் மற்றும் வேலையாட்களின் விலை உயர்ந்துள்ளதாலும் மேலும் மேற்படி பணி திட்டப்பணி என்பதால் அவசர பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு

1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட 3.95 சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ள திரு.எஸ்.அருணாசலம் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.
2. மேற்படி திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4147/2013/இ1)**

<u>**மன்றப்பொருள்: 14**</u>

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு **2015–2016**ம் ஆண்டிற்கான காலணிகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் வாங்கவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.**1.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2015/எச்1)**

<u>**மன்றப்பொருள்: 15**</u>

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு **2015–2016**ம் ஆண்டிற்கான சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் வாங்கவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2349/2015/எச்1)**

<u>**மன்றப்பொருள்: 16**</u>

இந்நகராட்சி பகுதிகளில் ஆட்டோ மற்றும் லாரிகள் மூலம் எடுக்கப்படும் குப்பைகள் அனைத்தும் நகராட்சிக்கு சொந்தமான மத்தளம் பாறை செல்லும் ரோட்டில் உள்ள உரக்கிடங்கிலும் மற்றும் கடையநல்லூார் உள்ள உரக்கிடங்கிலும் சேர்ப்பிக்கப்படுகின்றன. நாள்தோறும் தோராயமாக சுமார் **30** டன் குப்பைகள் கொட்டப்படுகின்றன. குப்பைகள் கொட்ட போதுமான இடவசதி இல்லாததால் உரக்கிடங்கில் அசுத்த சூழ்நிலை நிலவுவதுடன் ரோட்டின் ஓரங்களிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. எனவே மேற்படி உரக்கிடங்குகளில் அவ்வப்போது ஜே.சி.பி. இயந்திரம் மூலம் குப்பைகளை ஒதுக்கி குப்பைகள் கொட்ட இடவசதி ஏற்படுத்தவும், மழைக்காலங்களில் நகரில் ஏற்படும். பொதுசுகாதார குறைபாடுகளைசரி செய்யவும், நகராட்சி துப்புரவு பணியாளர்களால் பணிமேற்க்கொள்ள இயலாத கழிவு நீர் காலவாய்களினை சுத்தம் செய்யவும் பொது சுகாதார பயன்பாட்டிற்கு ஜே.சி.பி. இயந்திரத்தினை **2015–2016**ம் ஆண்டிற்கு வாடகைக்கு அமர்த்தி பணி மேற்க்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**3.00**லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு அமர்த்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**3.00** லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1284/2015/எச்1**

**<u>மன்றப்பொருள்: 17</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு உரக்கிடங்கினை ஜே.சி.பி இயந்திரம் மூலம் சமப்படுத்த 2015—2016ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டதில் 13/5/2015 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர் மற்றும் முகவரி | 1 மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம். | ரூ.910/— |
| 2 | திரு. சுப்பிரமணியன்<br>டபிள்யூ. எம்.எஸ். எல், கோவில்பட்டி | ரூ. 1099/— |

அ.கு

1 மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம்.ஒரு மணி நேரத்திற்கு ரூ.910/— என குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே ஏ.ஆர்.சி.ட்டி.ஐ.சி. ராஜபாளையம். ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண் 1284/2015/எச்1

**<u>மன்றப்பொருள்: 18</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிலுள்ள டி.எண்.76எப் 8885 லாரிக்கு புதிய மின்கலம் வாங்க 12/05/2015ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளித்தாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | BHAIRAVI ENTERPRISES<br>14A KUTRALAM MAIN ROAD<br>MELAGARAM, TENKASI | 9900 |
| 2 | SARAVANA BATTERY WORKS<br>69-3E PERUMAL KOVIL STREET. TENKASI | 9600 |

அ.கு

1 மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள SARAVANA BATTERY WORKS. TENKASI என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்1617/2015/எச்1

**மன்றப்பொருள்: 19**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76பி 6930 டம்பர் பிளேசருக்கு டயர்கள் வாங்கப்பட்டு இரண்டுகளுக்கு மேல்ஆகிவிட்டபடியாலும், 58000 கி.மீட்டர்கள் ஓடி விட்டதாலும் புதிய டயர்கள் 6 எண்ணம் வாங்கவும், டியூப்கள் வாங்கவும் அதற்கான செலவினம் ரூ.60,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் ஆகியவற்றை அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலமாக வாங்கவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்2164/2015/எச்1

**மன்றப்பொருள்: 20**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் அதிகமான காய்ச்சல் கண்டவர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுவது தெரியவருவதாகவும், எனவே டெங்கு காய்ச்சலை பரவுவதை கட்டுப்படுத்தும் வகைக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக மஸ்தூார் களப்பணியாளர்கள் 30 நபர்களை தற்காலிகமாக நியமித்து பணி செய்ய சங்கரன்கோவில் சுகாதாரப்பணிகள், துணை இயக்குநர் அவர்களால் நாள். 11/06/2015 ந.க.எண். 3179/2012/அ6ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் 3179/6/2013 நாள். 11/06/2015ம் தேதிய டிடி அலுவலக கடிதத்தில்ம இந்நகராட்சிக்கு 30 நபர்களை பணியில் ஈடுபடுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் பொருட்டு 30 தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் சூன் 2015 முதல் டிசம்பர் 2015 வரை பணியில் ஈடுபடுத்தவும், அதற்கான அரசுவிதிகளின்படி தினக்கூலி வழங்கவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மேற்படி 30 நபர்களை தற்காலிகமாக தினக்கூலி (மஸ்தூார்) அடிப்படையில் சூன் 2015 முதல் டிசம்பர் 2015 வரை பணியில் ஈடுபடுத்தவும், அதற்கான ஊதிய செலவினத்திற்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்2123/2015/எச்1

**<u>மன்றப்பொருள்: 21</u>**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட புதுமனை 1ம் தெரு, புதுமனை 2ம் தெரு மேல்பகுதி மற்றும் கீழ்பகுதி, மேலக்காரத் தெரு, களக்கோடித் தெரு, களக்கோடி சாவடி தெரு, உடையார் தெரு, அம்மன் சன்னதி (முன்சீப் கோர்ட்டு முன்பு), மதுரை ரோடு (ஆண்கள் பள்ளி முன்பு), அரிப்புக்காரத்தெரு (ரப்பானியா பள்ளி முன்பு), ஐவராஜா கோவில் தெரு, செங்குந்தர் பள்ளிவாசல் தெரு, மவுண்ட் ரோடு, நடுப்பேட்டை தெரு, மங்கம்மா சாலை, மரைக்காயர் பள்ளிவாசல் தெரு ஆகிய இடங்களில் அடிபம்பு நடைமேடையில் ஏற்பட்ட பழுதினை சரிசெய்ய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.0.80 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 22</u>**

இந்நகராட்சி ஆளுகைக்குட்பட்ட பகுதி வார்டு எண். 19 சொர்ணபுரம் தெருவில் வசித்து வரும் திரு. காதர்ஒலி என்பவரால் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நகராட்சி சார்பில் திரு. எஸ்.ஜோன்ஸ் அவர்களின் மூலமாக ஆஜராகவும் அதற்கான செலவு தொகையினை அனுமதிக்கவும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அ.கு 1 இந்நகர்மன்ற தீர்மான எண். 501 நாள். 27/03/2015ன்படி வார்டு எண்.19, சொர்ணபுரம் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன்படி மேற்படி மழைநீர் வடிகால் அமைக்கும் பணி செய்யப்பட்டது.

2 மேற்படி மழைநீர் வடிகால் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது என்று ஓ.எஸ்.எண். 479/2012ன்படி எக்ஸ்பார்டி தீர்ப்புரை திரு. காதர்ஒலி என்பவரால் பெறப்பட்டுள்ளது.

3 மேற்படி இடத்தில் மழைநீர் வடிகால் கட்டுவது குறித்து நகராட்சி வழக்கறிஞர் அவர்களின் சட்ட கருத்துரு பெற்று சட்ட கருத்துரை படி மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது. திரு. காதர்ஒலிக்கு சாதகமாக பெறப்பட்ட எக்ஸ்பார்டி தீர்ப்பின்படி அன்னார் நகராட்சிக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

4 நகராட்சி வழக்கறிஞர் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் திரு.எஸ்.ஜோன்ஸ் , வழக்கறிஞர் அவர்களை ஆஜராக ஆவண செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 23</u>**

தென்காசி நகராட்சி எல்கைக்குட்பட்ட 1708 எண்ணம் 1 X 40 வாட் குழல் விளக்குகளும், 12 எண்ணம் 70 வாட் சோடியம் ஆவி விளக்குகளும் 300 எண்ணம் 150 வாட் சோடியம் ஆவி விளக்குகளும் , 222 எண்ணம் 250 வாட் சோடியம் ஆவி விளக்குகளும் உள்ளன. மேற்படி விளக்குகள் ஒப்பந்த நிறுவனமான ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிட், நிறுவனத்தால் பராமரிக்கப்ப்டடு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு ஓராண்டு காலம் 30/09/2013 உடன் முடிவடைந்து விட்டதால் 2013–14 ஆண்டிற்கு 10–2013 முதல் 03–2014 வரை உள்ள காலகட்டத்திற்கு ரூ.2.50 இலட்சம் மற்றும் 2014–15ம் ஆண்டிற்கு 10.25 இலட்சம் ஆக 12.75 இலட்சத்திற்கு பின்னேற்பு மற்றும் 2015–16ம் ஆண்டிற்கான தனியார் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 தெருவிளக்குகள் பராமரித்து வரும் ஆகாஷ் இன்ஜினியரிங் (பி) லிட் என்ற நிறுவனம் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி செலவினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4 10–2013 முதல் 03–2014 வரை உள்ள காலகட்டத்திற்கு ரூ.2.50 இலட்சம் மற்றும் 2014–15ம் ஆண்டிற்கு 10.25 இலட்சம் ஆக 12.75 இலட்சத்திற்கு சென்னை ஆகாஷ் இன்ஜினியரிங் (பி) லிட் தொடர்ந்து பராமரிப்பு செய்த வகைக்கும் மேற்படி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

5 2015–2016ம் ஆண்டிற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2269/2009/இ1)

**<u>மன்றப்பொருள்: 24</u>**

இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதி 2014–15ம் ஆண்டு மேற்கொள்ளப்பட உள்ள கீழ்க்கண்ட வேலைக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.579 நாள்.30.06.2015 ம் தேதியில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 15.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரு இலட்சத்தில் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29 புதுமனை 4ம் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் தளக்கல் அமைக்கும் பணி | 3.70 | 1. திரு.ஆ.சின்னதம்பி ஒப்பந்தக்காரர் | 0.06% குறைவு |
| | | | 2. திரு.S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் | 1.57% கூடுதல் |

அ.கு 1 மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட 0.06% குறைவாக கொடுத்துள்ள ஆ.சின்னதம்பி ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 25</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண்.76 ப்பி6928 லாரிக்கு டயர்கள் வாங்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும் , ஒரு நாற்பத்தி மூவாயிரம் கிலோ மீட்டர்கள் ஓடி விட்டதாலும் புதிய ரேயான் டயர்கள் 6 எண்ணம் வாங்கவும், டியூப்கள் வாங்கவும், அதற்கான செலவினம் ரூ.60,400/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1788/2015/எச்1

**<u>மன்றப்பொருள்: 26</u>**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தினுள் கட்டப்பட்டு வரப்படும் அம்மா உணவகத்தில் கூடுதலாக அடிப்படை வசதி பணிகள் செய்ய 03/02/2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | டெண்டர் ரேட் |
|---|---|---|
| 1 | திரு. யு.முத்துக்குமார், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.03 சதவீதம் குறைவு |
| 2 | திரு.எஸ்.அருணாசலம், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.09 சதவீதம் அதிகம் |

அ.கு

1 இந்நகர்மன்றம் தனது 31/12/2014ம் தேதிய 441வது தீர்மானத்தில் இப்பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு முன்அனுமதி வாங்கியுள்ளது என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

2 வரப்பெற்றுள்ள மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. யு.முத்துக்குமார், ஒப்பந்தக்காரர் என்பவரால் மதிப்பீடு ரேட்டை விட 0.03 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

3 அம்மா உணவகம் விரைவில் திறக்கப்படலாம் என்பதன் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 27</u>**

திரு. சீனிமுருகன் / சுமதி என்ற தம்பதியினருக்கு வசந்தம் மருத்துவமனையில் 04/03/1998ல் பிறந்த ஆண்குழந்தை பிறப்பு பதிவில் பிறந்த தேதியினை 04/05/1997 என மாற்றம் செய்வது குறித்து தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். 197/2014 வழகககு தொடர்ந்துள்ளார்.

நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு. முகம்மது ரபீக் அவர்கள் ஆஜராகி உள்ளதால் வழக்கிற்கான வழக்குக் கட்டணம் பகுதி தொகையாக ரூ.3000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மேற்படி வழக்கு கட்டணத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1953/2015/எச்1

**<u>மன்றப்பொருள்: 28</u>**

திரு. வெ. அழகிரிசாமி / கைலாச வடிவு தம்பதியினருக்கு 03/12/1984ல் பிறந்த குழந்தையின் பெயரினை ஆனந்தி தில்லை சிதம்பரம் என பதிவு செய்யப்பட்டுள்ளதை ஆனந்தி சிதம்பரம் என்பதனை மாற்றி தில்லை என பெயர்மாற்றம் செய்ய தெரிவித்து தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். 173/2015 வழக்கு தொடர்ந்துளளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு. முகம்மது ரபீக் அவர்கள் ஆஜராகி உள்ளதால் வழக்கிற்கான வழக்குக் கட்டணம் பகுதி தொகையாக ரூ.2500/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மேற்படி வழக்கு கட்டணத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1619/2015/எச்1

**மன்றப்பொருள்: 29**

இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்குகளுக்கு நகராட்சி சார்பில் ஆஜரான வகைக்கு வழக்கு கட்டணம் வழங்கக் கேட்டு வழக்கறிஞர் திரு. பி. ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண். (ம) தொடர்ந்தவர் பெயர் | வழக்கு கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1 | W.P.No.18474/2014<br>செய்யதுஆபில் | 7500 |
| 2 | W.P.(MD) No.5322/2015<br>ஏ.எஸ்.குத்தாலிங்கம் | 7500 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 30**

இந்நகராட்சிக்கு எதிராக அம்பாசமுத்திரம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்கு நகராட்சி சார்பில் ஆஜரான வகைக்கு வழக்கு கட்டணம் வழங்கக் கேட்டு வழக்கறிஞர் எம்.செல்வஆண்டனி அவர்களுக்கு தொகை ரூ.5000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண். (ம) தொடர்ந்தவர் பெயர் | வழக்கு கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1 | I.A.No.181/2015<br>ஓ.எஸ்.எண்.159/2009<br>எஸ்தர் ராணி | 5000 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 31</u>**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட தலைமை தபால் அருகிலுள்ள நகராட்சி கட்டண கழிப்பிட வசூல் உரிமம் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுக்களால் நடத்தப்படும் நகராட்சி கழிப்பிடம் இந்நகர்மன்ற தீர்மான எண். 432 நாள். 31/12/2014ன்படி மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் ஏலம் நடத்தி ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டதன்படி 27/04/2015, 07/05/2015, 15/05/2015, 29/05/2015, 10/07/2015,15/07/2015 தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள கழிப்பிடம் தவிர்த்து ஏனைய கழிப்பிடங்களுக்கு ஒருவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே ஏற்கனவே நடத்தும் குழுக்கள் மூலம் நடத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4264/2014/அ2

**<u>மன்றப்பொருள்: 32</u>**

இந்நகர்மன்ற தீர்மான எண். 577 நாள் 30/06/2015ம் தேதிய தீர்மானத்தின்படி இந்நகராட்சி பழைய பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறையை 10/07/2015, 15/07/2015 மற்றும் 24/07/2015 ஆகிய தேதிக்குள் பகிரங்க பொதுஏலமிடப்பட்டதில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை என்பதால் 18/06/2015ம் தேதியன்று பகிரங்க பொது ஏலமிடப்பட்டதில் கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்விகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | ஏலதாரர் பெயர் | உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு. பி. வேம்பு | 4,52,000 |
| 2 | திரு. எஸ்.ஆர். சந்திரன் | 4,51,800 |

அ.கு

1) இவ்வினத்திற்கு முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ.6,73,738/–
2) மூன்று ஆண்டு சராசரி ஏலத் தொகை ரூ.6,42,164/–
3) நடப்பு நிதியாண்டில் கோரப்பட்டுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை (ஓராண்டிற்கு) ரூ.4,52,000/–
4) மேற்கண்ட இனத்தின் 05/02/2015, 25/02/2015, 10/03/2015, 12/03/2015, 26/03/2015, 27/04/2015, 07/05/2015,15/05/2015,

29/05/2015 ம் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏலமும் நடத்தப்பட்டது. முந்தைய ஆண்டு உரிமத் தொகை / மூன்று ஆண்டு சராசரி வருவாய்க்கு இணையாக ஒருவரும் ஏலம் கோரவும் / ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவும் முன்வரவில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு. மேலும் 01/04/2015 முதல் 17/06/2015 வரையில் நகராட்சியின் மூலமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.16,279/–

5) வசூல் பணிக்கு நகராட்சி துப்புரவுப் பணியாளர்களில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களின் பகல் / இரவு இரண்டு நபர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஊதியம் வழங்கப்படும் தொகை ரூ.13,166/–
6) இரண்டு நபர்கள் ஆகும். மாதம் ஒன்றிற்கு ரூ.13,166/– ம் ஊதியம் வழங்குவதன் மூலமாக வருடத்திற்கு ஊதிய தொகை ரூ.3,15,984/–
7) பில் புத்தகம் அச்சடிக்க கட்டணம் (உத்தேசமாக) ரூ.5,000/–
8) நகராட்சியால் செலுத்தப்படவுள்ள மின்சாரக் கட்டணம் ரூ.5,000/–
9) செப்டிக் டேங்க் சுத்தம் செய்வதற்கான கட்டணம் ரூ.6,000/–
10) கிரிமிநாசினிகள் வாங்கக் கட்டணம் ரூ.2,000/–
11) நகராட்சியில் வசூல் செய்தால் ஓராண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வசூல் வரவு தொகை (6293 X 12) ரூ.75,516/–
12) எனவே நகராட்சியில் ஓராண்டிற்கு வசூலிக்கப்படவுள்ள தொகை ரூ.75,516/– ஐ விட ஏலத் தொகை ரூ.4,52,000/– என்பது அதிகமாக உள்ளது.
13) நகராட்சியில் ஓராண்டிற்கு வசூலிக்கப்பட உள்ள தொகை ரூ.75,514/– வசூல் செய்ய நகராட்சியில் ஓராண்டிற்கு ரூ.3,33,984/– செலவிடப்பட வேண்டியுள்ளது என்பதுடன் நகராட்சிப் பகுதியில் துப்புரவுப்பணி மிகவும் அதிகமான அளவில் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.
14) முந்தைய மூன்று ஆண்டு உரிம ஏல காலத்தில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வந்த காரணத்தால் அனைத்து பேருந்துகளும் பழைய பேருந்து நிலையம் வந்து சென்று உள்ளது. தற்போது பாலம் திறக்கப்பட்டு பெருவாரியான பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுவதால் பயணிகள் வருகை குறைந்துள்ளதால் எலம் குறைவாக சென்றுள்ள விபரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>மன்றப்பொருள்: 33</u>**

இந்நகர்மன்ற தீர்மான எண். 577 நாள்30/06/2015ம் தேதிய தீர்மானத்தின்படி தபால் நிலைய பின்புறமுள்ள கழிப்பிடங்களை 10/07/2015, 15/07/2015, 24/07/2015 ஆகிய தேதிகளில் பகிரங்க பொதுஏலமிடப்பட்டதில் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை என்பதால் 18/06/2015ம் தேதியன்று பகிரங்க பொது ஏலமிடப்பட்டதில் கேட்கப்பட்ட உச்ச ஏலக்கேள்விகள் மீண்டும் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு. எஸ்.ஆர். சந்திரன் | 1,58,000 |
| 2 | திரு. பி. வேம்பு | 1,57,000 |

அ.கு

1 ஏற்கனவே உள்ள கழிப்பறைகள் பழுதடைந்த காரணத்தினால் அவைகள் இடித்து தற்பொழுது கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது. எனவே தொடர்ந்து ஏலமிடப்படலாம்.

2 ஏற்கனவே இருந்த பழைய கழிப்பறையில் 12 சீட்களும் , இரண்டு குளியலறைகள் இருந்தது. தற்போது கட்டப்பட்டுள்ள கழிப்பறையில் 8 சீட்டுகள் மட்டுமே உள்ளது. மேலும் குளியலறைகள் ஏதுவுமில்லை என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

3 முந்தைய கழிப்பறையை விட சீட்டுகள் குறைவாகவும் , குளியலறைகள் ஏதுமில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் இதற்கான ஏலத்தொகை ரூ.1,58,000/– சென்று உள்ளது என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

4) துறை மூலமாக வசூல் செய்ய போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், வருவாயை கருத்தில் கொண்டு உச்ச ஏலக்கேள்வியை மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்றப்பொருள்: 34**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள ஆட்டோ TN 76B 1441 வாகனத்திற்கு தகுதிச் சான்று 27/08/2015ல் தகுதிச் சான்று முடிவடைவதால் தகுதிச் சான்று பெற ரிப்பேர் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச செலவினம் ரூ.20,000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மேற்படி உத்தேச செலவினம் ரூ.20000/— ஐ மன்றம் அனுமதிக்கலாம்.
2 TN 76B 1441 ஆட்டோ 15/02/2013ல் வாங்கப்பட்டது. வாங்கப்பட்டு இரண்டு ஆண்டுகாலம் ஆகிறது.
3 அரசாணை எண். 983 நாள். 3/8/2004 உள்துறை (போக்குவரத்து) துறையின்படி ரூ.9,150/— மட்டுமே மேற்படி வாகனத்திற்கு செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது.
4 எனவே கூடுதல் செலவினம் ரூ.10,850/—க்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2821/2015/எச்1

**மன்றப்பொருள்: 35**

இந்நகராட்சி குடிநீர் நிதி 2015-16ம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு இந்நககர்மன்ற தீர்மான எண்: 523, 525, 546 & 548 நாள்: 30/06/2015ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 08.07.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கேரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 21 23 24 26 மலையான் தெரு GLR முதல் 4 வார்டுகளுக்கும் பைப்லைன் விஸ்திரிப்பு செய்தல் | 6.90 | சுடலைமுத்து ஒப்பந்தக்காரர்<br>சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் | 0.08% குறைவு<br>9.83% கூடுதல் |

அ.கு 1 மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகையை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 36**

இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார வளாகம் அருகில் (தலைமை தபால் நிலையம் பின்புறம்) பிளாஸ்டிக் கழிவு சேகரிக்கும் மையம் மற்றும் பிளாஸ்டிக் உதிர்ப்பான் இயந்திரம் (Plastic Shredder Machine) அமைக்க கட்டிடம் ரூ15.00 இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்:12961/2014/இ3நாள்:18.02.2015தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு 03/06/2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதார வளாகம் அருகில் (தலைமை தபால் நிலையம் பின்புறம்) பிளாஸ்டிக் கழிவு சேகரிக்கும் மையம் மற்றும் பிளாஸ்டிக் உதிர்ப்பான் இயந்திரம் (Plastic Shredder Machine) அமைத்தல் | 15.00 | திரு.G.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர்<br>திரு.S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 5.88% கூடுதல்<br>8.19% கூடுதல் |

